


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெல்லையில் பிப்ரவரி 7 அன்று முடிவுற்ற திட்டப்பணிகள் திறந்து வைத்தல்,புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்க உள்ள நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வஹாப், மாநகர செயலாளர் சுப்பிரமணியன், முன்னாள் எம்.பி., ஞானதிரவியம் மற்றும் ஆவின் ஆறுமுகம், பரமசிவ ஐயப்பன், மீரான்மைதீன் உள்பட பலர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நடைபெற்ற மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் கா.அழகையா – திருமதி ஈஸ்வரி ஆகியோர் மகள் அபர்ணா; சூரம்புலி, அ.பெரியண்ணன் – திருமதி அமுதா ஆகியோரது மகன் மணிமாறன் திருமணத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ மற்றும் மண மக்களின் உறவினர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், (03.02.2025) அன்று இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட மீனாட்சிபுரம் பகுதியில் அமைந்துள்ள முத்து மாரியம்மன் திருக்கோவிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் பங்கேற்று, பொதுமக்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார். உடன் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி, தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், மாவட்ட அறங்காவலர் குழுத்தலைவர் திருமதி புவனேஷ்வரி இளங்கோவன், இணை ஆணையர் திருமதி பாரதி, துணை மேயர் குணசேகரன், சிவகங்கை உதவி ஆணையர் திருமதி கவிதா, செயல் அலுவலர் விஸ்வநாத் உட்பட பலர் உள்ளனர்.

## மீனவர் பிரச்சினைக்கு

# இந்தியா - இலங்கை குழு பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்!

## புதுடெல்லியில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

புதுடெல்லி, பிப். 5 -

பேரறிஞர் அண்ணாவின் 56வது நினைவு நாளை ஒட்டி, டெல்லியில் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி தலைமையில் தி.மு.க. எம்பிக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர். டெல்லியில் உள்ள அண்ணா - கலைஞர் அறிவாலயத்தில் பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளையொட்டி அவரது திருவுருவப்படம் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்தது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி, அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒவ்வொரு முறையும் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கும்போது, மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்துகிறார். ஆனால், ஒன்றிய அரசாங்கம் நம்முடைய மீனவர்களுக்கும், இலங்கையில் இருக்கக் கூடிய மீனவர்களுக்கும் இடையே பேச்சு வார்த்தை நடத்திட வேண்டும். இதற்கு இலங்கை அரசாங்கத்திடம் பேசி நிரந்தர தீர்வு காண்பதற்காகக் குழுக்களை அமைப்பதாகப் பல ஆண்டுகளாக ஒன்றிய அரசு சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர அந்த கூட்டங்கள் நடைபெற்றதாக எந்த செய்தியும் கிடையாது.

அந்த குழு கூட்டங்கள் நடத்தி, இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று நாங்கள் மறுபடியும் வலியுறுத்துகிறோம். விரைவிலேயே ஒன்றிய அரசாங்கம் அங்கே கைது செய்யப்பட்டு இருக்கக் கூடிய நம்முடைய மீனவர்களை மற்றும் அவர்களுடைய படகுகளோடு மீட்டுத் தரவேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் மீண்டும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

தமிழ்நாடு தொடர்ந்து பல்வேறு விதங்களில் வஞ்சிக்கப்படுகிறது, ஆளுநர் பிரச்சினைகள் உட்பட அனைத்துப் பிரச்சினைகள் குறித்து நாங்கள் நாடாளுமன்றத்தில் விவாதிப்போம்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டார்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி யில் பேரறிஞர் அண்ணாவின் 56வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது சிலைக்கு காரைக்குடி மாநகர மேயர் செயற்குழு உறுப்பினர் சே.முத்துதுரை மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் உட்பட மாநகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. இரண்டாம் கட்டமாக கடலூர் கிழக்கு & கடலூர் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணி | கடலூர் மேற்கு | தொ.மு.ச. அலுவலகம், நெய்வேலி, கடலூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 01-02-2025







தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி மண்டலம்–3 க்கு உட்பட்ட காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு ஆகிய கழக மாவட்டங்களுக்கான ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அறிமுகக் கூட்டத்தை, மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், அந்தந்த மாவட்டங்களில் ஏற்பாடு செய்திட வேண்டுமென மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர், மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 03-02-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி




புதுச்சேரி மாநிலம் திருபுவனை மேம்பாலம் அருகில் சர்வீஸ் சாலை அமைத்திட வலியுறுத்தி விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் நடைபெற்ற மக்கள் திரள் ஆர்ப்பாட்டத்தில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா சிறப்புரை ஆற்றினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.